
# பண்பாடு போற்றுவோம்

டாக்டர் நாவலர்



வெளியீடு:
மக்கள் எழுச்சி மாமன்றம்
சென்னை-600005.



டாக்டர் நாவலர் அவர்களின் பிறந்த நாளன்று,
பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்கள்
பூமாலை சூட்டி வாழ்த்துகிறார்.

# பண்பாடு போற்றுவோம்

ஆசிரியர் :

டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்
எம். ஏ., டி. லிட்.,

வெளியிடுவோர் :

புலவர் இளஞ்செழியன்
எம். ஏ.,
செயலாளர்,
மக்கள் எழுச்சி மாமன்றம்

டாக்டர் எஸ். மாரியப்பன்
எம். ஏ.,
பொருளாளர்,
மக்கள் எழுச்சி மாமன்றம்

11—7—1985



# எல்லோரும் வாழ்த்துரைப்போம்

[புலவர் இளஞ்செழியன் எம். ஏ.,]

அகவையோ, அறுபத் தாறு !
ஆயினும், இளைஞர் ஏறு !
முகவரி வரைய வேண்டா
முழுநிலா! தமிழ கத்தின்
புகழொளி நிதிய மைச்சர் ;
புலமைக்கோ சங்க மேடை !
மகரயாழ் போன் று பேசும்
நாவலர் வாழ்க ! வாழ்க !

நாவலர், பண்பாட் டுக்கோர்
நடமாடும் தலைவர் ! 'பாட்டுப்
பாவலர் பவனி' காட்டிப்
பண்பாட்டைக் காட்டி யுள்ளார் !
நாவலர் காட்டு கின்ற
நல்லபண் பாட்டைக் காப்போம் !
'நாவலர் வாழ்க' என்றே,
எல்லோரும் வாழ்த்து ரைப்போம்.

# பண்பாடு போற்றுவோம்.

(டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்,
எம். ஏ., டி. லிட்.,)

''பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகல்'' என்று பண்பு என்னும் சொல்லுக்குப் பொருள் விளக்கம் தர வந்த கலித்தொகைச் செய்யுள் ஒன்று, அதனைக் தெள்ளத் தெளிவாகத் தெளிவுபடுத்திக் காட்டுகிறது.

மக்களின் சமுக வாழ்க்கையில், பாங்கு அறிந்து ஒழுகும் தன்மையை, அதாவது பாடு அறிந்து ஒழுகும் தன்மையைப் 'பண்பு' என்று குறிப்பிட்டனர் தமிழ்ச் சான்றோர். எனவேதான், பண்பேபாடு கூடிய பாங்கான ஒழுக்கத்தைப், 'பண்பாடு' என்றனர்.

'விடுதல்' என்ற சொல் 'வீடு' என்று ஆவதைப் போல, 'சுடுதல்' என்ற சொல் 'சூடு' என்று ஆவதைப் போல, 'கெடுதல்' என்பது 'கேடு' என்று ஆவதைப் போல, 'படுதல்' என்பது 'பாடு' என்று ஆகிறது. 'படுதல்' என்ற சொல் ஆகுதல்—தோன்றுதல்—புலப் படுத்துதல்—பொருந்துதல் போன்ற பொருள்களை உணர்த்துவதாகும். எனவேதான், பண்பினைப் புலப் படுத்துகின்ற ஒன்றைப் 'பண்பாடு' என்கிறோம்.

'பண்படுதல்' அல்லது 'பண்படுத்துதல்' என்பது செம்மையான—சீர் பெற்ற—சிறந்த—உயர்ந்த—மேம்பட்ட—அழகான—அருமையான—நலன் பெற்ற—பயன் பெற்ற—உறுதியான ஒரு நிலையை உணர்த்து

வதாகும். இதுகாரணம் பற்றித்தான், பண்பட்ட நிலம்—பண்பட்ட உள்ளம்—பண்பட்ட இனம்—பண்பட்ட மொழி—பண்பட்ட கலை—பண்பட்ட துறை—பண்பட்ட மனிதன் என்பன போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்துகிறோம்.

புன்செய் நிலத்தைப் பண்படுத்திப் பண்படுத்தி நன்செய் நிலமாக்குவதைப் போல, வறண்ட பகுதிகளைப் பண்படுத்திப் பண்படுத்தி வளமான நிலமாக்குவதைப் போல, வெள்ளைக் கல்லைப் பண்படுத்திப் பண்படுத்தி (பட்டை தீட்டிப் பட்டை தீட்டி), வைரமாக்குவதைப் போல, பாழ்பட்ட உள்ளத்தைப் பண்படுத்திப் பண்படுத்திப் பண்பட்ட உள்ளத்தைப் பெற முடிகிறது.

## பண்பாடும் நாகரிகமும்

உள்ளத்தைப் பண்படுத்தப் பயன்படும் கருவி பண்பாடேயாகும். மனிதனின் அகத்தோற்றப் பொலிவை வெளிப்படுத்திக் காட்டுவதும் பண்பாடேயாகும். மனிதனின் அகத்தோற்றத்தின் செம்மையைப் புலப்படுத்துவது எப்படிப் பண்பாடோ, (CULTURE) அதுபோன்றே மனிதனின் புறத்தோற்றத்தின் செம்மையைப் புலப்படுத்துவது நாகரிகம் (CIVILIZATION) என்று அழைக்கப்படும். நாகரிகம் என்னும் சொல் பண்டைய காலத்தில் பண்பாட்டை உணர்த்துவதற்கும் பயன்படுத்தப்பட்டு வந்தது என்றாலும், இற்றைக் காலத்தில், "CULTURE" என்னும் ஆங்கிலச் சொல் எதனைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறதோ, அதனைக் குறிக்கத் தமிழில் 'பண்பாடு' என்னும் சொல்லும், 'CIVILIZATION' என்னும் ஆங்கிலச் சொல் எதனை உணர்த்தப்பயன்படுத்தப்படுகிறதோ,

அதனை உணர்த்தத் தமிழில் 'நாகரிகம்' என்னும் சொல்லும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பண்பு—பண்பாடு போன்றவை மனிதனின் உள்ள நிகழ்வுகளைக் குறிப்பனவாகும். மேலும் அவை மனிதனோடு மட்டுமே தொடர்புபடுத்திச் சொல்லக் கூடிய தன்மையனவாகும். விலங்கினம்—பறவை யினம்— ஊர்வன—நீந்துவன— புழு—பூச்சி— பொட்டு போன்றவைகளுக்கு உள்ளம் இல்லை. எனவே அவற்றினிடத்தில் பண்பையோ, பண்பாட்டையோ எதிர்பார்க்க இயலாது. அவற்றினிடத்தில் உள்ளது சிறத்தல் (EVOLUTION) வழிவந்த சில இயல்புகள், சில பழக்கவழக்கங்கள், சில ஆற்றல்கள் இருக்கக் கூடும். ஆனால் அவற்றினிடத்தில் பண்பு நலத்தை யோ அல்லது பண்பாட்டுச் செம்மையையோ யாரும் எதிர்பார்க்கமாட்டார்கள். அவற்றின் தன்மை களைப் பற்றி அளவிடும்போது—

பசு எவ்வளவு பால் கறக்கும் ?

காளை எத்துணைப் பல்போட்டிருக்கிறது ?

குதிரை எவ்வளவு விரைவாக ஓடும்?

கழுதை எவ்வளவு பொதி சுமக்கும் ?

யானை என்ன வலிவு பெற்றிருக்கிறது ?

ஆட்டினிடம் ஊன் எவ்வளவு கிடைக்கும் ?

கோழியின் எடை என்ன ?

என்ற முறையில்தான் அளவிடுவோமேயல்லாமல்—

பசு பக்குவமாய் நம்மோடு பழகுமா ?

காளை அன்பு காட்டுமா ?

குதிரை அருள்பாலிக்குமா ?

கழுதை நட்புறவு கொள்ளுமா ?

யானை நம்மை மதிக்குமா ?

ஆடு மரியாதை காட்டுமா ?

கோழி பற்றுடன் இருக்குமா ?

என்று பண்பை வைத்து அளவிடமாட்டோம்.

மனிதனை மட்டுந்தான் பண்பை வைத்து அளவிடுகிறோம். ஒருவரைச் சுட்டிக்காட்டி—

அவர் நல்லவரா ?

பண்புடையவரா ?

பாங்கானவரா ?

உண்மையானவரா ?

ஒழுக்கமுடையவரா ?

நேர்மையானவரா ?

நாணயமானவரா ?

பழகுவதற்கு இனிமையானவரா ?

மதிக்கத்தக்கவரா ?

என்றுதான் பண்பாட்டை வைத்துக் கேட்போ மேயல்லாமல், நாம் ஒருவரைப் பார்த்தவுடன்,

அவர் எவ்வளவு எடை உள்ளவர் ?

எத்துணைப்பற்களை உடையவர் ?

என்று விலங்குகளைப்பற்றிக் கேட்பதைப்போலக் கேட்கமாட்டோம்.

## மனத்தின் இயல்பு

எதையும் அறிவால் ஆராய்ந்து, உள்ளத்தால் உணர்ந்து, பண்பை வெளிப்படுத்தும் பாங்கு மனிதனுக்கு மட்டுமே உண்டு. உள்ளம்—அகம்—மனம்—சித்தம்—சிந்தை—நெஞ்சம்—இதயம் போன்ற சொற்களை, மனிதனின் அகத்தோற்ற நிலைகளைப் புலப்படுத்தப் பயன்படுத்துகிறோம். இந்தச் சொற்களையெல்லாம், ‘மனம்’ என்று ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்களாக, இன்றைய நிலையில், நாம் பயன்படுத்தி வந்தாலும், பண்டைக்காலத்தில், தமிழ்ப் பெரும் புலவர்கள், மனத்தின் வெவ்வேறு நிலைகளைக் குறிப்பாகவும், திட்டவட்டமாகவும், தெளிவாகவும் உணர்த்தப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

மனம் என்பது மனிதனுக்கு மட்டுமே அமைந்த காரணத்தால், ‘மனத்தன்’ என்று பெயர் பெற்று, நாளடைவில் ‘மனிதன்’ என்று அழைக்கப்பட்டான் என்றும், ‘மனிதன்’ என்னும் தமிழ்ச்சொல்லே ‘மனுஷன்’ என்று வடமொழியில் திரிந்து நின்றது என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.

மனம் மனிதனுக்கு மட்டுமே உண்டு என்பதைத் திருநாவுக்கரசர் ஓரிடத்தில் உணர்த்துகிறார். அவர், தாம் வழிபடும் கற்பனைக்கடவுளை நினைந்து வரம்

வேண்டும்போது, "புண்ணியனே! நான் புழுவாய்ப் பிறந்திட்டாலும் கவலையுறேன்; ஆனால் உன்னை நான் நினைப்பதற்குரிய மனத்தை மட்டும் எனக்கு வரமாகத் தரவேண்டும்" என்னும் பொருள்பட

**"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே,**
**வழுவா திருக்க வரம் தர வேண்டும்"**

என்று வேண்டுகிறார்.


## உயர்ந்த—தாழ்ந்த இனத்தவர்

உலகில் பல ஆயிரக்கணக்கான இனமக்கள் இருந்தாலும், ஓர் இனம் உயர்ந்ததா? தாழ்ந்ததா? வளர்ச்சியுற்றதா? குறைவுடையதா? சிறந்ததா? சிறப்பற்றதா? பெருமைக்குரியதா? அல்லவா? என்பதைக் கண்டறிவதில், 'பண்பாடு'—'நாகரிகம்' ஆகிய இரண்டு தன்மைகளை வைத்துத்தான், எடை போட்டுப் பார்க்கிறார்கள் பேரறிஞர்கள்.

பண்பாட்டால்-நாகரிகத்தால் உயர்ந்த இனத்தவர் என்று கணக்கிடும்போது, தமிழர்-கிரேக்கர்-உரோமானியர்-எகுபதியர்-பாபிலோனியர்-அராபியர்-சுமேரியர்-ஆரியர்-மங்கோலியர் போன்றவர்களை உயர்ந்தோர் பட்டியலில் சேர்க்கின்றனர். ஆப்பிரிக்கர்கள்-சிவப்பு இந்தியர்கள்- எஸ்கிமோக்கள்-மலைவாழ் மக்கள் போன்றவர்களைத், தாழ்ந்த நாகரிகமற்ற பண்பாடற்ற காட்டுமிராண்டியர் பட்டியலில்சேர்க்கின்றனர்.

## தமிழர் பண்பாடு

செம்மையாகவும், சிறப்பாகவும் உருவாக்கப் பட்டு-வளர்க்கப்பட்டு-போற்றப்பட்டுக்— காப்பாற்றப்




வள்ளுவர் கோட்டத்தில்—திருவள்ளுவர் திருநாளில் அறச் செல்வர் புரட்சித் தலைவரும் அறிவுச்செல்வர் டாக்டர் நாவலரும்



1985—தமிழக முதல்வர் புரட்சித் தலைவரும், நிதி யமைச்சர் டாக்டர் நாவலரும் நான்காவது ஊதியக் குழுப் பரிந்துரையை ஏற்கும் காட்சி



1984 அக்டோபர்—டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் உடல்நலம் பற்றி உசாவ வந்த இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களை டாக்டர் நாவலர் வரவேற்றல்.



சட்டப்பேரவையில் நிதிநிலை அறிக்கையை வைக்கப் புறப்பட்டு வருகிறார்கள் புரட்சித்தலைவரும் டாக்டர் நாவலரும்

பட்டு வந்த பண்பாடுகளில், 'தமிழர் பண்பாடு' தலைசிறந்த ஒன்றாகும். தமிழர் போற்றிப்பாராட்டிச் சிறப்பித்து வந்த பண்பாடுகள் என்ன என்ன? எப்படிப் பட்டவை? என்பவற்றையெல்லாம் தொல்காப்பியத்திலிருந்து, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் படைப்புக்கள் வரையில் உள்ள இலக்கியங்களில் பொதுவாக விரவிக் காணப்படுகின்றன என்றாலும், வேறு எந்த மொழியிலும் இல்லாத அளவுக்குக் குறிப்பாகவும், சிறப்பாகவும், சீராகவும், செம்மையாகவும், அடுக்கடுக்காகவும், அழுத்தந்திருத்தமாகவும் தமிழர் பண்பாட்டுக் கருத்துக்களைச் சொல்லழகு-பொருளாழம்-அணிவனப்பு-ஓசை இன்பம் ஆகியவற்றோடு நயம்பட எடுத்துரைக்கும் திறம்படைத்த முழுநூல்கள் செந்தமிழ் மொழியில் பலப்பல உண்டு. அவற்றில் சிறப்புற்றுத் திகழும் சிலவற்றைக் குறிப்பிட வேண்டுமாயின்,

தொல்காப்பியப் பொருளதிகாரம்

திருக்குறள்

நாலடியார்

இன்னா நாற்பது

இனியவை நாற்பது

ஆத்தி சூடி

கொன்றை வேந்தன்

அறநெறிச் சாரம்

சிறுபஞ்சமூலம்

திரிகடுகம்

நன்னெறி

வெற்றிவேற்கை

பாரதியார் ஆத்திசூடி

பாரதிதாசன் ஆத்திசூடி

போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பழம்பெருங் காலந்தொட்டுத் தமிழ்ச் சான்றோர்களும், தமிழ்ப் பெருங்குடி மக்களும் எப்படிப்பட்ட சிறந்த பண்பாடுகளைப் போற்றியும், பாராட்டியும், மதித்தும், துதித்தும், வாழ்த்தியும், வரவேற்றும் வந்தனர் என்பதை, மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள, நூல்கள் வலியுறுத்தியிருக்கும் அறவுரைகளும் அறிவுரைகளும் தெள்ளத் தெளிவாகக் காட்டும்.

## வள்ளுவர் வலியுறுத்தும் பண்பாடு

மனிதனின் உயர்வை எடுத்துக் காட்டுவது அவனது நிலையல்ல; அவனது நினைப்பேயாகும். நிலைக்கு ஏற்ற நினைப்பு இருக்கவேண்டும். உயர்ந்த நிலைக்கு ஏற்ப, உயர்ந்த நினைப்பும் இருக்க வேண்டும். மேலான நிலையில் இருந்தாலும், கீழான நினைப்புடையவராக ஒருவர் இருப்பாரேயானால், அவரை மேலானவராகக் கருதமுடியாது. கீழான நிலையிலிருந்தாலும் மேலான நினைப்புடையவராக ஒருவர் இருப்பாரேயானால் அவரைக் கீழானவராகக் கருதக் கூடாது. இதனை வள்ளுவப் பெருந்தகையார்,

**மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும்**
**கீழல்லார் கீழல் லவர் (குறள்—973)**

என்று தெளிவுபடுத்துகிறார்.

'பெருமைப்பண்பு' எது? 'சிறுமைப்பண்பு' எது? என்பதைத் திருவள்ளுவர் பெருமான் திட்டவட்டமாகப் பாகுபடுத்திக் காட்டுகிறார்.

செருக்கு இல்லாமலிருப்பது பெருமைப்பண்பாகும்; செருக்கு மிகுந்து அதன் எல்லைக்கே போய்விடுவது சிறுமைப்பண்பாகும்.

**பெருமை பெருமிதம் இன்மை; சிறுமை**
**பெருமிதம் ஊர்ந்து விடல். (குறள் 979)**

பெருமைப்பண்பு பிறருடைய குறைபாட்டை எப்பொழுதும் மறைக்கும்; சிறுமைப்பண்பு பிறருடைய குற்றங்குறைகளை எப்பொழுதும் எடுத்துச் சொல்லிக்கொண்டே இருக்கும்.

**அற்றம் மறைக்கும் பெருமை; சிறுமைதான்**
**குற்றமே கூறி விடும் (குறள்—980)**

பெருமைப்பண்பு எங்கும், எக்காலத்திலும் பணிந்தே நடக்கும்; சிறுமைப்பண்பு எப்பொழுதும் தன்னைத்தானே வியந்து பாராட்டிக்கொண்டிருக்கும்.

**பணியுமாம் என்றும் பெருமை; சிறுமை**
**அணியுமாம் தன்னை வியந்து (குறள்—978)**

பெருமைப்பண்பு அறிவில் பெரியோர்களை எப்பொழுதும் விரும்பிப் போற்றும்; சிறுமைப்பண்பு அப்படிப்பட்ட பெரியோரின் சிறப்பை உணரும் உணர்ச்சியைக் கொண்டிருப்பதில்லை.

**சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்**
**பேணிக்கொள் வேம் என்னும் நோக்கு (குறள்—976)**

பண்பாடுடையவனாக ஒருவன் திகழ்வதற்கு எவ்வெவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதைப் பொய்யாமொழிப் புலவர், வள்ளுவர் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறி யுள்ளார்.

பண்பாடுடையவனாக வாழும் ஒரு நல்வழியைப் பெறவேண்டுமாயின், எவரிடத்திலும் எளியமுறையில் பழகவேண்டும்; அப்படிச் செய்யின் பண்பாடு எளிதில் கிட்டும்.

**எண்பதத்தால் எய்தல் எளிது என்ப யார்மாட்டும்**
**பண்புடைமை என்னும் வழக்கு (குறள்—991)**

பண்பாடுடையவனாக வாழ இரண்டு நல்வழி வாய்ப்புக்கள் அமையவேண்டும்; ஒன்று அவன் அன்புடையவனாக இருக்க வேண்டும். இரண்டு அவன் உயர்ந்த குடியில் பிறந்த தன்மையைக் கொண்டிருக்க வேண்டும்.

**அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்**
**பண்புடைமை என்னும் வழக்கு (குறள்—992)**

மனிதனோடு மனிதனை ஒப்பிட்டுப் பார்க்க, பண்பாடுதான் ஏற்றுக்கொள்ளக்கூடிய சிறந்த அளவு கோலாகும். ஒத்த உடல் தோற்றங்களை வைத்துக் கொண்டு, ஒப்புமை எடைபோடுவது கொள்ளத் தக்கதன்று.

**உறுப்பு ஒத்தல் மக்கள் ஒப்பு அன்றால் வெறுத்தக்க**
**பண்புஒத்தல் ஒப்பதாம் ஒப்பு (குறள்—993)**

பண்பாடுடையவர்களால் இயக்கப்படுவதால்தான் உலகம் உயிரோடு இலங்குவதாக இருந்து வருகிறது; அப்படிக்கு இல்லை என்றால், உலகம், மண்ணோடு மண்ணாய் மாய்ந்துவிட்டதாகத்தான் கருதப்பட வேண்டும்.

**பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்; அது இன்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்** (குறள்—996)

ஒருவன் அறிவு இல்லாதவனாக இருந்தாலும், அவன் பண்பாட்டோடு இருப்பானேயானால், அவனை மனிதன் என்று போற்றலாம்; ஒருவன் அரத்தின் கூர்மைபோல் கூரிய அறிவுடையவனாக இருந்தாலும், அவனிடத்தில் பண்பாடு இல்லையென்றால், அறவே பண்பாட்டை எதிர்பார்க்கமுடியாத மரத்திற்குச் சமமாகத்தான் அவனைக் கருதவேண்டும்.

**அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண்பு இல்லா தவர்** (குறள்—997)

நீதியை நிலைநாட்டுதல், நன்மையைப்புரிதல், பிறர்க்குப் பயன்பட வாழ்தல் என்பவை பண்பாடுகளாகும். இத்தகைய பண்பாடுகளைக் கொண்டிருப்பவரைத்தான், உலகத்தார் பாராட்டிக்கொண்டாடுவர்.

**நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
**பண்புபா ராட்டும் உலகு** (குறள்—994)

**சால்பும் அறமும்**

தமிழரின் மிக உயர்ந்த பண்பாட்டை இரண்டு சிறந்த சொற்கள் உணர்த்திக் கொண்டிருக்கின்றன. அவை '**சால்பு**'—'**அறம்**' என்னும் இரண்டுசொற்களாகும்.

போற்றுதற்குரிய எல்லா நற்பண்புகளும் மாட்சிமைப் பட்ட ஒரு நிலையைக் குறிக்கும் சொல்தான், **'சால்பு'** என்பது. சால்பு உடையவர்தான் 'சான்றோர்' எனப் போற்றப்படுவர். போற்றுதற்குரிய எல்லாக் கடமை களும் ஒருங்கிணைந்த ஒரு நிலையை உணர்த்தும் சொல்தான் **'அறம்'** என்பது. சிந்தனையின் மாட்சியை வெளிப்படுத்துவது **'சால்பு'**. செயலின் மாட்சியை உணர்த்துவது **'அறம்'**.

பண்பாடுகளின் நலந்தான், சான்றோரின் நலம் என்று கூறப்படுவதாகும்; மற்றமற்ற நலங்கள் எந்த வொரு நலத்திலும் பொருத்திவைத்து எண்ணப் படுவன அல்ல,

**குணநலம் சான்றோர் நலனே; பிறநலம்**
**எந்நலத்து உள்ளதூஉம் அன்று** (குறள் — 982)

'சால்பை'ப் பற்றிக் குறிப்பிடும்போது வள்ளுவப் பெருந்தகையார், "பிறருடைய தீமையை எடுத்துச் சொல்லாத நற்பண்பே சால்பாகும்"

**... ...... - ...... ...பிறர்தீமை**
**சொல்லா நலத்தது சால்பு'** (குறள்-984)

என்றும்,

"தமக்கு எந்த வகையிலும் ஒப்பிட முடியாத தாழ்ந்தோரிடத்திலும், தோல்வியை ஏற்றுக்கொள்ளும் பண்புதான் சால்புக்கு உரைகல் போல் மதிப்பிடும் கருவியாகும்"

**'சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி**
**துலையல்லார் கண்ணும் கொளல்'** (குறள் - 986)

என்றும்,

"துன்பத்தைச் செய்தவர்க்கும் இனிய உதவிகளைச் செய்வதுதான், சான்றோரின் சால்புக்கு எடுத்துக்காட்டாகும்"

'இன்னா செய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு' -(குறள் - 987)

என்றும்,

"சால்பு என்னும் கட்டடத்தைத் தாங்கி நிற்கும் ஐந்து தூண்களாவன: அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்து பண்புகளாகும்"

'அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு,
ஐந்து சால்பு ஊன்றிய தூண்' -(குறள் - 983)

என்றும், வகைப்படுத்திக் கூறுகிறார்.

## புறநானூறு சுட்டிக்காட்டும் பண்பாடு

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்களின் பல்வேறு வகைப்பட்ட வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளைச் சிறப்பாகச் சுட்டிக் காட்டும் பெற்றியினைப் பெற்ற சீரிய நூல் புறநானூறு ஆகும். தமிழரின் பண்பாட்டு நலச்சிறப்புக்களை ஆன்றவிந்த கொள்கைச் சான்றோரான புலவர் பெருமக்கள் பலர், தனித்தனிப் பாடல்கள் மூலம், அறிவுரைகளாகவும், அறவுரைகளாகவும், கூற்றுக்களாகவும், செய்திகளாகவும், நிகழ்ச்சிகளாகவும் புறநானூற்றில் சுட்டிக் காட்டுகின்றனர்

தமிழர் பண்பாடு பற்றிப் புறநானூறு கூறும் சில கூற்றுக்களையும், செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

**கணியன் பூங்குன்றன்**

கணியன் பூங்குன்றன் என்ற புலவர் பெருமான் பண்டைத் தமிழர் போற்றிய பண்பாட்டைச் சில வரிகளில் தெளிவுபடுத்திக் காட்டுகிறார்.

"எந்த ஊராயினும் அந்த ஊர் எமது ஊரே! எந்த மனிதராயினும் அந்த மனிதர் எமது உறவினரே! வாழ்தல் என்பது எப்பொழுதும் இன்பம் பயக்க வல்லது என்று எண்ணி மயங்கி மகிழ்ந்து விடவும் மாட்டோம்! அது எப்பொழுதும் துன்பந் தரத்தக்கது என்று நினைத்து மருண்டு அதனை வெறுத்தொதுக்குதல் செய்யவும் மாட்டோம்! செல்வத்தால் பெரியவர் என்பதற்காக ஒருவரை மதித்து விடவும் மாட்டோம்! செல்வங்குறைந்த சிறியோர் என்பதற்காக ஒருவரை இகழ்ந்தொதுக்கவும் மாட்டோம்! அவரிடம் காணப் படும் பண்பாடு ஒன்றை மட்டுந்தான் மதிப்போம்!"

**'யாதும் ஊரே; யாவரும் கேளிர்'.**<br>
**.......................................**<br>
**........................... வாழ்தல்**<br>
**இனிது என மகிழ்ந்தன்றும் இலமே: முனிவின்**<br>
**இன்னாது என்றலும் இலமே!**<br>
**.............................மாட்சியின்**<br>
**பெரியோரை வியத்தலும் இலமே!**<br>
**சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே!**

**(புறம்—192)**

## பக்குடுக்கை நன்கணியார்

பக்குடுக்கை நன்கணியார் என்னும் புலவர், “இவ்வுலகத்தின் இயல்பை நன்கு உணர்ந்த யாவரும், துன்பம் பயப்பனவற்றைச் சிந்தனையினின்றும் ஒதுக்கிவைக்க வேண்டும்; இன்பம் பயப்பனவற்றை மட்டும் கண்டு மகிழவேண்டும்” என்று அறிவுறுத்து கிறார்.

> **‘இன்னாது அம்ம, இவ்வுலகம்!**
> **இனிய காண்க! இதன் இயல்பு உணர்ந்தோரே!’**

(புறம்—194)

## நரிவெரூஉத் தலையார்

நரிவெரூஉத் தலையார் என்னும் புலவர், “நீங்கள் நல்ல செயல்களைச் செய்து முடிக்க முன்வராவிட்டாலும், தீய செயல்களைச் செய்யாமல், அவற்றினின்றும் விலகி நில்லுங்கள்! எல்லா மக்களும் விரும்புவது அதைத்தான்! உங்களை நல்ல வழியிலே செலுத்தி வாழுமாறு செய்வதற்கு அதுதான் ஏற்ற வழியாகத் திகழும்!” என்று அறவுரை பகருகிறார்.

> **நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்,**
> **அல்லது செய்தல் ஓம்புமின்! அதுதான்,**
> **எல்லாரும் உவப்பது! அன்றியும்**
> **நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே!**

(புறம்—195)

## ஆவூர் மூலங்கிழார்

ஆவூர் மூலங்கிழார் என்னும் புலவர், பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் என்னும் பாண்டிய மன்னனைப் பார்த்துப் பரிசில் பெறச்

செல்கிறார். அவன் பரிசில் நல்கவில்லை என்றாலும், புலவர் அரசனிடம் பண்பாட்டை உணர்த்திவிட்டு, அவனை வாழ்த்திவிட்டும் திரும்புகிறார். அவர் அரசனைப்-பார்த்து, "பொருள் கொடுக்க முடியும் என்றால் முடியும் என்றும், கொடுக்க எதுவும் இல்லை என்றால் இல்லை என்றும் சொல்லிவிட வேண்டும். அதுதான் தாளாண்மை உடையவரின் பண்பாட்டுத் தன்மையாகும். இயலாத ஒன்றை, இயலும் என்றும், இயலக்கூடிய ஒன்றை இல்லை என்றும் கூறுதல் கூடாதாகும். அப்படிப்பட்ட செயல் இரப்போரை வருந்தச்செய்யும்; உன்னுடைய புகழைக் குறைத்து விடும். நீ என்னிடத்தில் செய்ததும் அப்படிப்பட்ட செயலாகவே ஆகிவிட்டது. என்றாலும், உன்னுடைய மகன்கள் நோயற்று வாழ்வார்களாக! நான் செல்லு கிறேன்: உன்னுடைய வாழ்நாள் சிறப்பதாக!" என்று கூறித் தம் பண்பாட்டுப் பெருமையை நிலைநாட்டு கிறார்.

**'ஒல்லுவது ஒல்லும் என்றலும், யாவர்க்கும்**
**ஒல்லாது இல்லென மறுத்தலும், இரண்டும்**
**ஆள்வினை மருங்கின் கேண்மைப் பாலே!**
**ஒல்லாது ஒல்லும் என்றலும், ஒல்லுவது**
**இல்லென மறுத்தலும், இரண்டும் வல்லே!**
**இரப்போர் வாட்டல்! அன்றியும் புரப்போர்**
**புகழ்குறை படூஉம் வாயில் அத்தை**
**அனைத்தாகியர்!.................... அதனால்**
**நோயிலர் ஆக நின் புதல்வர்!....................**
**செல்வல் அத்தை; சிறக்க, நின்நாளே!** (புறம்—196)

## கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக்குமரனார்

கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் என்னும் புலவர், சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனைக்கண்டு, "நாற்படை வளமும், எல்லாச் செல்வமும் மிகுந்த பேரரசர் என்றாலும், எங்களை மதிக்காத எவரையும் நாங்களும் மதிக்க மாட்டோம். வரகுச் சோறு தந்து எம்மை ஊட்டும் சிற்றூர் வேந்தராயிருந்தாலும், எங்களுடைய தகுதி அறிந்து பண்பாட்டோடு ஒழுகும் பண்புடைய வராயிருந்தால், அவரை நாங்கள் பாராட்டுவோம்! இரவலர்க்குப் பயன்படாத அறிவில்லாதவர்களின் செல்வத்தை, நாங்கள் எவ்வளவு வறுமையுற்றிருந் தாலும், நினைத்துக்கூடப் பார்க்கமாட்டோம். ஆனாலும் நல்லறிவுடையோர் வறுமையுற்றுக் காணப் பட்டாலும், நாங்கள் மிகப்பெரிதாக மதிப்போம். அவர்கள் வாழவேண்டும் என்று விரும்பி வாழ்த்து வோம்" என்று கூறுகிறார்.

**"மண்கெழு தானை, ஒண்பூண் வேந்தர்**
**வெண்குடைச் செல்வம் வியத்தலோ இலமே!**
**எம்மால் வியக்கப் படூஉ மோரே**
**புன்புல வரகின் சொன்றியொடு, பெறூஉம்**
**சீறூர் மன்னர் ஆயினும், எம்வயின்**
**பாடறிந்து ஒழுகும் பண்பினோரே!**
**மிகப்பேர் எவ்வம் உறினும், எனைத்தும்**
**உணர்ச்சி யில்லோர் உடைமை உள்ளேம்:**
**நல்லறிவுடையோர் நல்குரவு**
**உள்ளுதும், பெரும! யாம், உவந்து நனி பெரிதே!"**

**(புறம்—197)**

## கழைதின் யானையார்

கழைதின் யானையார் என்னும் புலவர், கடையேழு வள்ளல்களில் ஒருவரான வல்வில் ஓரியைப் புகழ்ந்து பாடிய பாடலில், மிக உயர்ந்த பண்பாட்டு அறிவுரையை நல்குகிறார்.

“ஒருவர், ‘ஒன்றைத்தா”வென்று மற்றொருவரிடத்தில் இரத்தல் இழிவான செயலாகும்; அவ்வாறு இரந்தோர்க்கு, ‘ஒன்றையும் தரமாட்டேன்’ என்று மறுத்தல், மேற்குறிப்பிட்ட இழிவைக் காட்டிலும் மிகவும் இழிவான செயலாகும்; ஒருவர் தாமே விரும்பி, ‘கொள்வாயாக’ என மற்றொருவரிடம் கூறுவது, உயர்ந்தவொரு செயலாகும்; அவ்வாறு கொடுப்பதைக் ‘கொள்ளமாட்டோம்’ என்று கூறுவது, மேற்சுட்டிக் காட்டியதை விட மிக உயர்ந்த ஒரு செயலாகும்!

**‘ஈஎன இரத்தல் இழிந்தன்று! அதன் எதிர்**
**ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று!**
**கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று! அதன் எதிர்**
**கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று!**
(புறம் – 204)

## பெருந்தலைச் சாத்தனார்

பண்டைக்காலத் தமிழ்ப்புலவர்கள் வறுமையிலே வாடி உழன்றாலும், தம்முடைய தகுதியையோ, நிலையையோ, மானத்தையோ, மதிப்பையோ இழக்க முற்படுவதில்லை. தன்மதிப்பு என்னும் பண்பாட்டினைக் காப்பாற்றுவதிலே, எப்பொழுதுமே கண்ணுங்கருத்துமாகவே இருந்து வந்திருக்கின்றனர். பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர், கடியநெடுவேட்டுவன் என்ற வேடர்கள் தலைவனான கொடையாளியைக்

காணச்சென்றபோது, அவனிடத்தில் ஒரு கருத்தை உணர்த்துகிறார்.

"நிறைவான செல்வங்களைப் படைத்த மூவேந்தர்களாக இருந்தாலும், அவர்கள் எம்மைப் பேணி மதியாது கொடுக்கும் பரிசுகளை யாம் வேண்ட மாட்டோம்"

'முற்றிய திருவின் மூவர் ஆயினும்
பெட்பு இன்று ஈதல் யாம் வேண்டலமே! (புறம்-205)

## பெருஞ்சித்திரனார்

பெருஞ்சித்திரனார் என்னும் புலவர், வெளிமான் என்ற கொடைவழங்கும் சிற்றரசனைக் காணச் செல்லுகிறார். அப்பொழுது வெளிமான் இறந்து விட்டான் என்ற செய்தி புலவருக்குக் கிடைக்கிறது. அவனைப் போலவே அவனது தம்பி இளவெளிமானும் கொடையாளியாக இருப்பான் என்று கருதிக்கொண்டு, அவனிடம் பரிசில் பெறப்போகிறார். இளவெளிமான் புலவரை மதித்து வரவேற்காமல், அவருக்குச் சிறிதளவு பொருள் கொடுத்துவிட்டு, வாளா இருந்துவிடுகிறான். பெருஞ்சித்திரனார், இளவெளிமான் கொடுக்க முன் வந்த பொருளைப் பெற்றுக் கொள்ளாது, "எமக்கு உலகமும் பெரிது, எம்மை விரும்புபவரும் பலர் இருக்கின்றனர்" என்றுசொல்லிவிட்டுப் பண்பாட்டை நிலைநாட்டிவிட்டு ஏகிறார். அவர் பரிசிலை எதிர்பார்த்து வந்த தமது நெஞ்சைப்பார்த்துக் கூறுவதுபோல, உணர்த்துகிறார்.

"எமது நெஞ்சமே! எழுந்திருப்பாயாக! யாம் போவோம்! விரும்பி வரவேற்றுப் பாராமல், அருகில் கண்டும் காணாது போல் இருந்து, உள்ள மகிழ்ச்சி

யில்லாமல் தரப்படும் பரிசிலை எவர்தாம் விரும்புவார் கள்? எவராயிருந்தாலும், எம்மை வருக''! என்று கூறி, எம்மை எதிர் கொண்டு வரவேற்கவேண்டும்! இப்படிப் பட்ட தகுதி படைத்த எம்மைப் போன்றவர்க்கு உலகமும் பெரிதாகத்தானிருக்கிறது. எம்மை விரும்புபவர்களும் பலராகத்தான் இருக்கிறார்கள்!''

**எழு இனி, நெஞ்சம்! செல்கம்! யாரோ,**
**பருகு அன்ன வேட்கை இல்வழி,**
**அருகில் கண்டும் அறியார் போல,**
**அகம்நக வாரா முகன்அழி பரிசில்**
**தாள் இலாளர் வேளார் அல்லர்!**
**'வருக' என வேண்டும் வரிசையோர்க்கே**
**பெரிதே உலகம்! பேணுநர் பலரே!'** (புறம்—207)

பெருஞ்சித்திரனார், தகடூரை அரசாண்டு வந்த வள்ளலான அதிகமான் நெடுமான் அஞ்சியைப் பார்க்க ஒருமுறை சென்றார். அவன் புலவரை நேரிடையாகப் பார்க்காமல், பெரும் பொருளை அவருக்குப் பரிசிலாகக் கொடுத்தனுப்புகிறான். நேரில் பார்த்துத் தகுதி-திறமையறிந்து கொடுக்காத பரிசிலைத் தாம் ஏற்றுக் கொள்ள மறுத்துப் போய் விடுகிறார். அப்பொழுது அவர் கூறிய கூற்று வருமாறு:

''நான் பரிசில் பெறவேண்டி குன்றுகள், மலைகள் பலவற்றையும் கடந்து வந்தேன்! என்னை அன்புடன் பேணி 'இப்பொருளைக் கொள்க' என்று கூறினானா? என்னுடைய திறனை எவ்வாறு அறிந்தான் இவன்? என்னை அழைத்து நேரிடையாகக் காணாமல் தந்த

பொருள் இது? 'இத்னைக் கொண்டுசெல்' நானோர் வாணிகப் பரிசிலன் அல்லன்! என் தகுதியறிந்து பரிசில் தினையளவு சிறிதாக இருந்தாலும், அதுவே எனக்குப் பெரிதும் இனிமை பயக்கும். மதிக்காமல் தரும் பரிசில் ஏற்றுக் கொள்ளக்கூடியதன்று''

**'குன்றும் மலையும் பலபின் ஒழிய**
**வந்தனென்! பரிசில் கொண்டனென் செலற்கு என**
**நின்ற என் நயந்து அருளி, 'ஈது கொண்டு**
**ஈங்கனம் செல்க, தான்' என என்னை**
**யாங்கு அறிந்தனனோ, தாங்கரும் காவலன்?**
**காணாது ஈத்த இப்பொருட்கு யானோர்**
**வாணிகப் பரிசிலன் அல்லேன்; பேணித்**
**தினை அனைத்து ஆயினும், இனிது அவர்**
**துணை அளவு அறிந்து, நல்கினர் விடினே!**

**(புறம்—208)**

**ஆலத்தூர் கிழார் :**

ஆலத்தூர் கிழார் என்னும் வேளாண் குடியினரான புலவர், சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளி வளவன் என்ற சோழவேந்தனைக் கண்டு அறத்தாறு பற்றிக் கூறுகிறார். தமிழ்மக்களின் பண்பு நலன் களைச் சிறப்பாகச் சுட்டிக்காட்டுகிறார்.

''ஆவின் மடியினை அறுத்த அறநெறி அற்றோர்க்கும், மங்கல மகளிரின் கருவினைச் சிதைத் தோர்க்கும், தம் தாய் தந்தையரைக் கொன்ற கொடுமையாளர்க்குங்கூடக் கழுவாய் உண்டு. ஆனால், உலகமே தலைகீழாக மாறினாலும், ஒருவர் செய்த நன்றியை அழிக்க முயல்பவருக்கு, உய்வே இல்லை என்று அறநூல் பாடியிருக்கின்றது''


'ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்,
மாண் இழை மகளிர் கருச்சிதைத்தோர்க்கும்,
குரவர்த் தப்பிய கொடுமையோர்க்கும்,
வழுவாய் மருங்கின் கழுவாயும் உள என
நிலம்புடை பெயர்வ தாயினும், ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்திஇல் என
அறம் பாடின்றே' (புறம்-34)

**ஆலியார் :**


ஆலியார் என்னும் புலவர் பண்டைத் தமிழரின் மறக்குடிப் பண்பாட்டை ஒரு செய்யுளின் மூலம் தெளிவுபடுத்துகிறார். போர்க்களத்தில் படையை நடத்திச் செல்லும் படைத்தலைவன் படைவீரர்கள் பின் தொடர, தான் முற்படச் செல்லவேண்டும். அது தான் மறவனின் மாண்பு. மற்ற வீரர்களை முந்துறச் சொல்லிவிட்டுத், தான் பின் தங்குபவன், சிறந்த மறக்குடி மகன் ஆக மாட்டான். படை வீரர்க்கு முற்பட நின்று, முந்துறச்செல்லும் ஒரு வீரனைப் பற்றி, மற்ற வீரர்கள் புகழ்ந்துரைப்பதைப் போல், புலவர் பாடியுள்ளார்.

"பகைவனின் காவல் அரண்களை முற்றுகையிட்டவனாக முனைந்து நின்று, வாய் இதழ்களை மடித்து முழக்கமிட்டுக்கொண்டு, "நீவிர் முந்திச்செல்லுவீர்" என்று எம்மை ஏவாமல், தானே முந்துபடச் செல்கின்றானே! வேந்தனே! இதுவல்லவோ அவனது இனிய மறப்பண்பு !"

'நன்றும்
இன்னான் மன்றவந்தே! இனியே
நேரார் ஆரெயில் முற்றி
வாய்மடித்து உரறி நீமுந்து என்னானே! (புறம்-298)




தமிழக அரசுத் தலைமைச் செயலகத்தில், தமிழக முதல்வர் புரட்சித் தலைவரும், தமிழக நிதியமைச்சர் டாக்டர் நாவலரும்.




வெண்தாடி வேந்தர் பெரியாரும் இளந்தாடி எனப்
பெயர்பெற்ற டாக்டர் நாவலரும்




அறிஞர் தலாய் லாமா அவர்களுடன் டாக்டர் நாவலர்




*1984* நவம்பர்—சென்னையில் வெள்ளச் சேதத்தைப் பார்வையிட வந்த இந்தியத் தலைமை அமைச்சர் திரு· இராஜீவ் காந்தி அவர்களுடன் டாக்டர் நாவலர்



புதிய அமைச்சரவை அமைப்பதற்கான இசைவு முடங் கலை-மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள், மேதகு ஆளுநர் குரானா அவர்களிடம் அளிக்கிறார். அருகில் டாக்டர் நாவலர். [*1985*]



இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஜெயில்சிங் அவர்களை டாக்டர் நாவலர் வரவேற்கிறார்.



குடியரசுத் துணைத்தலைவர் திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்களை டாக்டர் நாவலர் வரவேற்கிறார்.

**இரும்பிடர்த் தலையார் :**

இரும்பிடர்த்தலையார் என்னும் புலவர் கரிகாற் சோழனின் தாய்மாமன் என்பர். அவர் பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும் பெயர் வழுதி என்ற பாண்டிய மன்னனின் அரும்பெருஞ் சிறப்புக்களைப் புகழ்ந்து பாடுகிறார். பாண்டிய மன்னனின் பண்பாட்டுச் சிறப்பைச் சுட்டிக்காட்டும்போது,

"உலகமே நிலை பிறழ்ந்தாலும், நீ உன் சொல் பிறழாது
போற்றும் பண்புடையவன்"

என்று புகழ்கிறார்.

**'நிலம் பெயரினும் நின் சொல் பெயரல்'** (புறம் – 3)

**உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் :**

உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் என்னும் பெரும்புலவர், ஆய்அண்டிரன் என்னும் வரையாது வழங்கும் வள்ளலைப் பல பாடல்கள் மூலம் புகழ்ந்து பாடியுள்ளார். புலவர் அறத்தின் பண்பு, நெறி யாது என்பதை ஒரு செய்யுளில் தெளிவுபடுத்திக் காட்டுகிறார்.

"இன்றைக்குச் செய்த நற்செயல் பிறிதொரு நாளைக்குத் தமக்கு உதவியாக அமையும் என்று, பின்னால் வருகின்ற ஊதியங் கருதி, அறச்செயல் புரிபவன் ஆய்அண்டிரன் அல்லன். அவனது அறம்புரியும் கைவண்மையானது, சான்றோர் எத்தகைய அறவழியிலே சென்றனரோ, அத்தகைய அறவழியிலேயே தானும் செல்ல வேண்டும் என்ற நற்செய்கையாகிய கடப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டதாகும்."

" இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்
அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்
பிறரும் சான்றோர் சென்ற நெறியென,
ஆங்குப்பட்டன்று அவன் கைவண்மையே
(புறம் – 134)

## கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி :

கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி பாண்டிய மன்னனாக மட்டுமல்லாமல், சிறந்த புலவனாகவும் திகழ்ந்தான். கடற்போரில் ஈடுபட்டுக் கடலில் இறந்து பட்டதன் காரணமாக அவனைக் 'கடலுள் மாய்ந்த' என்ற அடைமொழி வழங்கி அழைத்தனர். அவன் பண்பாட்டில் உயர்ந்தவர்களின் பண்புநலங்களை விதந்து கூறுவதோடு, பண்பாடு மிக்க அப்படிப்பட்ட உயர்ந்தவர்களால்தான் இந்த உலகமானது உயிரோடு இயங்கிவருகிறது என்றும் வலியுறுத்திக் கூறு கிறான். இல்லையென்றால், இவ்வுலகமானது செத்த உலகமாகத்தான் இயங்கும் என்பதுஅவனது கருத்து.

"இந்த உலகம் இன்னமும் உயிருடன் இருக்கிறது! என்னே வியப்பு! இதற்குக்காரணம், தமக்கு என்று எதையும் செய்து கொள்ளாமல், பிறருக்காகவே உழைக்கும் உண்மையான் இயல்பு உடையவர்கள் இருப்பதே யாகும்! அத்தகையவர்கள் புகழ் பெற்றோர்க்குரிய அமுதம் கிடைப்பதாயினும், அது தமக்கு ஏற்ற இனிமையான பொருள் என்று கருதித் தாமே தனித்து உண்ணாதவர்கள்! அவர்கள் சினங் கொள்ள மாட்டார்கள்! அவர்கள் எதைப்பற்றியும் கவலைப்படாமல், வாளா இருந்து, சோம்பிக்கிடந்து, தூங்கிவிடவும் மாட்டார்கள்! பிறர் எது எதற்கு

அஞ்சி வாழ்கிறார்களோ, அது அதற்குத் தாமும் அஞ்சுவார்கள்! புகழ் நிலைநாட்டப்படுகிறது என்றால் அதற்காகத் தம் உயிரையும் கொடுப்பார்கள்! பழி வந்து சேரும் என்றால் அப்படிப்பட்ட செயலைச் செய்ய, உலகத்தையே பரிசாகக் கொடுக்க யார் முன் வந்தாலும் அதனை ஏற்கமாட்டார்கள்! அயர்ந்து அடங்கிப்போய்விட மாட்டார்கள்! அத்தகைய மாட்சிமைப்பட்டவர்கள்தாம் அந்த உயர்ந்தோர்கள்"

**உண்டால் அம்ம, இவ்வுலகம்! இந்திரர்**
**அமிழ்தம் இயைவதாயினும், இனிது எனத்**
**தமியர் உண்டலும் இலரே! முனிவிலர்!**
**துஞ்சலும் இலர்! பிறர் அஞ்சுவது அஞ்சிப்**
**புகழ் எனின், உயிருங் கொடுக்குவர்! பழியெனின்**
**உலகுடன் பெறினும், கொள்ளலர்! அயர்விலர்!**
**அன்ன மாட்சி அனைய ராகித்,**
**தமக்கென முயலா நோன்தாள்,**
**பிறர்க்கென முயலுநர் உண்மையானே! (புறம்-182)**

**காவட்டனார் :**

காவட்டனார் என்னும் புலவர் பெருமான், அந்துவன் கீரன் என்ற சிற்றரசனைப்பார்த்துப் பண்பாட்டு அடிப்படையில் சில உறுதிப்பொருள்களை அவனுக்கு அறிவுறுத்துகிறார்.

"இந்த உலகில் ஒருவன் தேடிவைத்த வசையும் நின்று நிலவும்! அவனது இசையும் நின்று நிலவும்! அதனால் வசையை நீக்கி இசையையே விரும்புவாயாக! கைக்கூலி வேண்டாது பிறர்க்கு நன்றே

சொல்வாயாக! இரவலர்க்கு வரையாது கொள்க எனத் தருவாயாக! நீ மறைந்த பின்னும், நீ எய்திய புகழானது, இவ்வுலகத்திலே, வெளிப்படையாகவே நெடுங் காலம் வரை நிலைத்து நிற்கும்!''

**'வசையும் நிற்கும்! இசையும் நிற்கும்!**
**அதனால் வசைநீக்கி இசைவேண்டியும்**
**நசை வேண்டாது நன்று மொழிந்தும்**
**...........................................**
**இரவலர்க்கு அருகாது**
**கொள் என விடுவையாயின், வெள்ளென**
**ஆண்டு நீ பெயர்ந்த பின்னும்.**
**ஈண்டு நீடு விளங்கும்! நீ எய்திய புகழே!**
**(புறம் - ⅁59)**

## சேரமான் கணைக்கால் இரும்பொறை :

சேரமான் கணைக்காலிரும்பொறை என்பான் சேர மன்னன் ஆவான். அவன் சோழன் செங்கணான் என்ற சோழ அரசனோடு போர் புரிந்தான். சோழ மன்னன் போரில் வென்றான். சேரமன்னன் தோற்றுக் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டான். சிறையில் கிடந்தபோது நா வறட்சியுற்று நீர்வேட்கை ஏற்பட்டது. காவல் காக்கும் பணியாளரைப் பார்த்துத் தண்ணீர் கேட்டான். அந்தக் காவல்காரன் சேர மன்னனை ஒரு பொருட்டாகக் கருதாமல், தன் விருப்பம்போல் காலந்தாழ்த்தித் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான்.

சேரமான் அதனைக் கையில் வாங்கி வைத்துக் கொண்டு, தன் இழிந்த நிலையைப் பற்றி எண்ணி

வருந்தலானான். மான உணர்ச்சி அவன் உள்ளத்தைப் பெரிதும் வாட்டியது. 'மானத்தை விட்டுவிட்டு உயிரைக் காப்பாற்றிக்கொள்வதா?, அல்லது உயிரை விட்டுவிட்டு மானத்தை நிலை நாட்டுவதா? என்ற உணர்ச்சி அவனது மனத்தை மிகவும் அலைக் கழித்தது. இறுதியில் மானவுணர்ச்சி வென்றது. இரந்து பெற்ற தண்ணீரைப் பருகாமல் அதனை வீசி எறிந்து விட்டுத்,தன் உயிரை விட்டு மானத்தை நிலை நிறுத்தினான். மானத்தை நிலை நாட்ட வேண்டும் என்ற பண்பாட்டு உணர்வை, ஒரு செய்யுளின் மூலம் அவன் உணர்த்துகிறான் தான் இறந்து படுவதற்கு முன்பு.

"மன்னர் குடியிலே குழந்தையானது இறந்து பிறந்தாலும், தசைப்பிண்டமாகவே பிறந்தாலும், அவற்றை வாளால் வெட்டிய பிறகே புதைப்பர்! நானோ பகைவர் வாளால் சாவாது போயினேன்! சங்கிலியினால் கட்டப்பட்டு, நாய்போலத் துன்புறுத் தப்பட்டுச் சிறைப்பட்டேன்! என்னைச் சிறையில் அடைத்த பகைவரின் அருளால் வந்த தண்ணீரை, இரந்து பருகக்கூடாது என்ற மனவலிமையைக் கொள்ளாமல், வேட்கையைத் தாங்கிக்கொள்ள இய லாமல், என்னைப் போல, இரந்து உண்ணும் தன்மை யுடைய அரசரை இவ்வுலகில் யாரேனும் பெற்றெடுத்துப் போற்றுவரோ?"

'குழவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும்,
ஆள் அன்று என்று வாளின் தப்பார்;
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்,

மதுகை இன்றி, வயிற்றுத் தீத்தணியத்,
தாம் இரந்து உண்ணும் அளவை
ஈன்ம ரோ, இவ் உலகத்தானே? (புறம் - 74)

## சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் :

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்பான் சோழமன்னன் ஆவான். அவன் குளமுற்றம் என்ற இடத்தில் இறந்ததன் காரணமாகக் 'குள முற்றத்துத் துஞ்சிய' என்ற அடைமொழி வழங்கப் பட்டது அவனுக்கு. அவன் ஆட்சிப் பகுதியில், சிறு குடி என்னும் சிற்றுரில் பண்ணன் என்னும் வேளாண் பெருங்குடிமகன் ஒருவன் இருந்தான். அவன், தன்னைத் தேடி வந்தார்க்கெல்லாம் சின்னஞ்சிறுவர் களாக இருந்தாலும், வயதில் பெரியவர்களாக இருந் தாலும், இரவலர்களாக இருந்தாலும் சோறு அளித்துக் கொண்டே இருந்தான். பண்ணனின் சோறு வழங்கும் வள்ளன்மையைக் கிள்ளிவளவன் புகழ்ந்து பாராட்டு கிறான். ஒரு குடிமகனைக் கோவேந்தன் பாராட்டு கிறான் என்பது, பண்பாட்டின் உயர்ந்த நிலையைக் காட்டுவதாகும். கிள்ளிவளவன், சிறுகுடிபண்ணன் கிழானை ஒரு செய்யுள் மூலம் பாராட்டுகிறான். பண்ணனிடம் பரிசில் பெற்று வந்த பாணன் ஒருவன், பரிசில் பெறச்செல்லுகின்ற பாணனிடம் கூறுவது போல் பாராட்டு மொழி அமைந்துள்ளது.

பரிசில் பெற்ற பாணன் சிறுகுடி பண்ணனை "பசிப்பிணி மருத்துவன்" என்று குறிப்பிடுகிறான். "என் வாழ்நாளையுங் கூடப்பெற்று அவன் வாழ் வானாக !" என்று வாழ்த்துகிறான்.

'யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய !

.......................................................

பசிப்பிணி மருத்துவன் இல்லம்

அணித்தோ ? சேய்த்தோ ? கூறுமின், எமக்கே.

(புறம்-173)

**நக்கீரர் :**

கடைச்சங்கப் புலவர் பெருமக்களுள் நக்கீரர் தலைசிறந்த ஒருவர். மதுரைக் கணக்காயனார் என்னும் பெரும்புலவரின் மகனாவார். அவர் அறவுரையின் மூலம் பண்பாட்டுக்கொள்கையை நிலை நாட்டுகிறார். நாடாளும் அரசனானாலும், வேட்டை யாடும் கல்லாத வேடன் ஆனாலும் இருவர்க்கும் தேவைகள் ஒன்றே என்று சொல்லிவிட்டுச் செல்வம் எப்படிப் பயன்பட வேண்டும் என்பதை வலியுறுத்து கிறார்.

"உண்ணப்படும் பொருள் ஒவ்வொருவருக்கும் நாழி அளவே! உடுக்கப்படுபவை அரையாடை மேலாடை ஆகிய இரண்டே! இவைபோலவே பிற உடல்-உள்ளத் தேவைகளும் ஒன்றாகவே இருக்கும். அதனால் செல்வத்தின் பயனாவது, அது இல்லாத வர்க்கு உவந்து கொடுத்தலே யாகும். யாமே நுகருவோம் என்று எவரேனும் எண்ணினால், இவ்வாறு எண்ணித் தவறியவர் வாழ்வுகள் இவ்வுலகில் பலவாகும்.

உண்பது நாழி ! உடுப்பவை இரண்டே !

பிறவும் எல்லாம் ஓரொக்கும்மே !

அதனால், செல்வத்துப் பயனே ஈதல் !

துய்ப்பேம் எனினே, தப்புந பலவே ! (புறம்-189)

**மோசிகீரனார் :**


மோசிகீரனார் என்னும் புலவர், சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர மன்னன் முரசுக்கட்டிலில் அறியாது படுத்துறங்கிய தம்மை, வெட்டி வீழ்த்தாது, தாம் ஒரு தமிழ்ப்புலவர் என்ற காரணத்தால், கவரிகொண்டு மெல்லிய காற்றுப்பட வீசி மரியாதை காட்டிய பண்பாட்டைப் பெரிதும் வியந்து கூறுகிறார்.

"மென்மையான முரசு வைக்கும் படுக்கையில் அறியாது ஏறிப்படுத்துறங்கிய என்னை இருகூறாக வெட்டாது நின் வாளைக் கீழே போட்டாய்! நீ தமிழை முழுவதும் அறிந்ததால், தமிழறிந்தாரை மதிக்கும் மாண்பினையுடையாய் என்பதற்கு இதுவே போதுமானது."

**'மென்பூஞ்சேக்கை**
**அறியாது ஏறிய என்னைத் தெறுவர,**
**இருபாற் படுக்கும் நின் வாள்வாய் ஒழித்ததை!**
**அதூ உஞ்சாலும் நற்றமிழ் முழுது அறிதல்**[4]


(புறம் - 50)

தமிழர் போற்றிய பண்பாட்டின் சிறப்பையும், மேன்மைகளையும் உணர்த்த ஒரு சில எடுத்துக் காட்டுக்கள் மட்டுமே புற நானூற்றிலிருந்து இங்குக் காட்டப்பட்டுள்ளன. தமிழ் இலக்கியங்கள் அனைத்தையும் துருவித்துருவி ஆராய்ந்தால், எண்ணிறந்த எடுத்துக்காட்டுக்களைக் கண்டுகண்டு இறும்பூதெய்தலாம். □



தமிழகச் சட்டப் பேரவையில் புரட்சித் தலைவர்
அருகிலிருக்க டாக்டர் நாவலர் நிதிநிலை
அறிக்கையைப் படிக்கிறார்.

# பேரறிஞர் அண்ணாவும் டாக்டர் நாவலரும்



தோழர் நெடுஞ்செழியன் எனக்குத் தம்பிதான் வயதில்! உண்மையில் அவரைத் தம்பி என்று அழைப்பதில் பெருமைப்படுகிறேன். என்னை அண்ணாவாகக் கொண் டிருப்பதில் அவரும் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

—1956 திருச்சி மாநில
மாநாட்டில் அறிஞர் அண்ணா